அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சோ தர்மனின் தூர்வை நாவலில் மழைச்சடங்குகள்

So Dharmanin Thoorvai Navalil Malai Satangukal

M. Gomathi, *Research Scholar, Department of Tamil, M.R. Government Arts College,* ***(Affiliated to the Bharathidasan University)*** *Mannargudi -614 001, Thiruvarur District -614 001*

Dr.L.Bhommi, *Associate Professor & Research Supervisor, Department of Tamil, M.R. Government Arts College,* ***(Affiliated to the Bharathidasan University)*** *Mannargudi - 614 001, Thiruvarur District - 614 001*

மு. கோமதி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ம.இரா. அரசினர் கலைக் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் - 614 001.

முனைவர் இல. பொம்மி, இணைப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, ம.இரா. அரசினர் கலைக் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் - 614 001.

Abstract

Literature often reflects human life and culture by portraying the customs, beliefs, and practices of a community. Through such representations, authors communicate their perspectives on society and human experience. In this context, the novel Thoorvai is set in Urulaikudi, a village in the black-soil (Karisal)region of southern Tamil Nadu, and vividly depicts the agricultural lifestyle of its inhabitants. Since agriculture in this region depends heavily on rainfall, the community faces significant challenges during periods of drought or delayed monsoon. In response to such crises, the villagers perform a variety of traditional rain-invoking rituals rooted in their cultural and religious beliefs. This paper examines the rain rituals portrayed in Thoorvai and analyzes the cultural meanings associated with these practices.

Keywords: *Rain Rituals, Cultural Practices, Folk beliefs, Village Traditions*

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியப் படைப்பென்பது மனித சமூகத்தின் வாழ்வியலைப் பேசுவதுதான். எனவே ஓர் இலக்கியப் படைப்பிலே பல்வேறு பண்பாட்டு நடைமுறைகளும் விரிவாகச் சித்தரிக்கப்பெறுகின்றன. இந்தச் சித்திரிப்புகளின் வாயிலாகப் படைப்பாளி, தான் உணர்த்த விரும்பும் செய்தியை, புலப்படுத்த எண்ணும் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்திவிடுகின்றார். இந்த வகையில் உருளைக்குடி என்னும் கரிசல் வட்டாரக்கிராமத்தில் வேளாண் வாழ்க்கையை மிகச்சிறப்பாக எடுத்துரைக்கும் தூர்வை நாவல், வேளாண் தொழிலுக்கு ஆதாரமான மழை குறித்தும் மழை பொய்த்துப் போகிற காலங்களில் அம்மழையை வேண்டிச் செய்யப்பெறும் சடங்குகள் குறித்தும் சிறப்பாகச் சித்திரித்துள்ளது. இந்த மழைச்சடங்குகள் குறித்தும் இச்சடங்குகளின் பின்னணியில் இருக்கும் மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கரிசல் மண்ணின் பண்பாட்டு வாழ்வியல் நடத்தைகள் குறித்தும் ஆராய்கின்ற நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள் : *மழை வேண்டிச் செய்யப்படும் சடங்குகள், கலாச்சார மரபுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள், கிராமிய மரபுகள்*

முன்னுரை

நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல் மனித வாழ்வை வெகு நுணுக்கமாக, விரிவாக, உள்ளது உள்ளபடிச் சித்திரிப்பதில் மிகுந்த அவதானிப்புக்குரியதாகின்றது. நாவலின் களம் இன்னதென்றில்லாமல் வாழ்வின் வெவ்வேறு பகுதிகளையும் கவனப்படுத்துவதாய் அமைந்து விடுகின்றது. இந்த வகையில் நாவலின் களம் குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்து, குறிப்பிட்ட மக்கள் குழு சார்ந்து அமைந்து விடுகின்ற சூழலில் அந்த வட்டாரத்தின், மக்கள் குழுவின் ஒட்டுமொத்த வாழ்வியல் செயற்பாடுகளையும் வெகுநுணுக்கமாக விவரித்துப் பதிவு செய்துவிடுகின்றது. இந்தப் பதிவின், விவரிப்பின் வாயிலாகக் குறிப்பிட்ட வட்டாரத்தின், மக்கள் குழுவின் வாழ்வியலை, பண்பாட்டைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இந்த வகையில் நாவல் என்பது குறிப்பிடத்தக்க ஓர் இலக்கிய வடிவமாகக் கவனம் பெறுகின்றது. இந்தப் பின்னணியில், சோ. தர்மனின் தூர்வை நாவலில் இடம்பெற்றுள்ள மழைச் சடங்குகள் குறித்து ஆராய்வதாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

தூர்வை நாவல்

கரிசல் மண்ணின் வாழ்வியலைத் தன் படைப்புகளின் வழியே நேர்த்தியாக எடுத்துரைத்து வரும் எழுத்தாளர் சோ. தர்மன், 'தூர்வை' நாவலிலும் இந்தக் கரிசல் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளார். கரிசல் பகுதியான 'உருளைக்குடி' எனும் ஊரைக் களமாகக் கொண்டமைந்துள்ள தூர்வை நாவல் கரிசல் மண்ணையும், மக்களையும், அவர்களின் முதன்மையான தொழிலான வேளாண்மையையும், வேளாண்மையோடு தொடர்புடைய பல்வேறு பண்பாட்டுச் செயற்பாடுகளையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. குறிப்பாகச் சுட்டினால், 'கரிசல் வாழ்க்கையை' அச்சு அசலாக, வெகு எதார்த்தமாகப் பதிவு செய்துள்ள நாவலே 'தூர்வை' நாவல் எனலாம். வேளாண்மையைத் தங்கள் உயிராதாரமாகக் கொண்ட உருளைக்குடி மக்கள் கண்மாயையே தங்கள் தொழிலுக்கு ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனர். கண்மாய் பெரும்பாலும் மழை நீரையே நம்பியிருப்பதால் மழை பொய்க்கும் காலங்களில் கண்மாய் வறண்டு வேளாண்மை கேள்விக்குறியாகிறது. இந்த நிலையில் மழையை வேண்டி உருளைக்குடி மக்கள் மேற்கொள்ளும் சடங்குகள் குறித்த பதிவுகள் நாவலில் மிகுந்த கவனம் பெறுகின்றன.

உழவரும் மழையும்

"ஒரு நாட்டின் அடிப்படை வளங்களில் நீர் வளமும் ஒன்றாகும். உலகின் ஆதி நாகரிகங்கள் யாவும் நீர்வளம் நிரம்பிய பகுதியில்தான் உருவாயின. உயிர் வாழ மிகவும் அடிப்படையான தேவைகளுள் ஒன்றான தண்ணீரைக் கிணறு, குளம், ஏரி, ஆறு எனப் பல நீர்நிலைகள் மூலம் மனிதன் பெற்றுக் கொள்கிறான் என்றாலும் இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது மழைதான்.

உலகை வாழவைக்கும் மழையை ஆவலுடன் எதிர்நோக்குபவர்கள் உலகிற்கு அச்சாணியாக விளங்கும் உழவர் பெருமக்கள்தாம். அவர்களின் உழைப்பையெல்லாம் பயனுடையதாக்குவது மழைதான். தேவையான அளவு பெய்யும் மழை, பயிர்களைச் செழிக்கச் செய்து அவர்கள் வாழ்வை வளப்படுத்துகிறது. காலத்தில் பெய்யத் தவறினாலோ, அளவு மீறிப் பெய்தாலோ அவர்கள் வாழ்வு வளம் குன்றுகிறது. இவ்வாறு உழவர்களின் வாழ்வில் இன்றியமையாத் தேவையான மழையைக் குறித்து அவர்களிடையே நாட்டார் பாடல்களும் நம்பிக்கைகளும் சடங்குகளும் தோன்றியுள்ளன" (சிவசுப்பிரமணியன், ஆ., 2011: 218, 219).

மழை மானுட வாழ்க்கையில் எத்துணை முக்கியம் பெறுகின்றது? உலக வாழ்க்கையின் இயக்கத்திற்கு எப்படி அடிப்படையாகிறது என்பதை உணர்ந்தமையால்தான் சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்தில் இளங்கோவடிகளும் வான்சிறப்பு அதிகாரத்தில் திருவள்ளுவரும் மழைக்கு முதன்மை தந்து போற்றியுள்ளனர்.

மழைச் சடங்குகள்

மழை உலக வாழ்க்கைக்கு அடிப்படையானது. குடிக்க, வேளாண்மை செய்ய என நீரின் தேவை பல நிலைகளில் முக்கியமாகின்றது. நீரை உருவாக்க முடியாது. ஏனெனில், அது இயற்கையின் கொடை. பூமிக்கு மழையின் வாயிலாகவே நீர் கிடைக்கின்றது. எனவே, நீரென்பது மழையின் வாயிலாகவே கிடைப்பதால் வேளாண்மையில் ஈடுபடுவோருக்கு மழை முக்கிய ஆதாரமாகின்றது. மழை பொய்க்காமல் பெய்கின்றபோது அதனைக் கொண்டு தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்கிற உழவர்கள், மழை பொய்க்கின்ற காலங்களில் அதனைப் பெறவேண்டிச் செய்கின்ற சடங்குகளே மழைச் சடங்குகள் எனப்பெறுகின்றன. தமிழகம் வேளாண்மைக்கு மழையையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால் மழை வேண்டிச் செய்யப்பெறும் சடங்குகள் பலவற்றைக் கொண்ட பகுதியாக விளங்குகின்றது. மழைக் கஞ்சி எடுத்தல், கொடும்பாவி கொளுத்துதல், நாட்டுப்புறத் தெய்வங்களான ஐயனார், கருப்புசாமி, மாரியம்மனுக்குப் பொங்கலிடல் முதலான சடங்குகளுடன், "நிர்வாண நடனம் ஆடுதல், கடவுளருக்குத் தண்டனை தருதல்" (சிவசுப்பிரமணியன், ஆ., 2011:227) உள்ளிட்ட சடங்குகளும் மழை வேண்டிச் செய்யப்பெறும் சடங்குகளாக இடம் பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது.

தூர்வை நாவலில் மழைச்சடங்குகள்

"சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவம் ஆகும். இது தனி மனிதனின் சுயமான ஆக்கபூர்வமாகவோ பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன என்கிறார் ரூத் பெனிக்டிக்" (ஞானசேகரன், தே., 2000:11). எனவே, சடங்குகளைப் பொறுத்தவரை அவற்றைப் பொருளற்ற செயற்பாடுகள் எனப் புறந்தள்ளாது, அவற்றை நிகழ்த்தும் மக்கள் குழுவின் வாழ்வியலை, உலக நோக்கைப் புலப்படுத்தும் பண்பாட்டு நடத்தைகள் எனக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும்.

இந்த வகையில் பார்க்கின்றபோது, சோ. தர்மன் தூர்வை நாவலில் பதிவு செய்துள்ள மழைச்சடங்குகள் வேளாண் குடியின் வாழ்வை எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

"அந்த வருசம் மழை ஏமாற்றிவிட்டது. வீட்டில் சேர்த்து வைத்திருந்த விதை வித்துக்கள் எல்லாவற்றையும் காட்டில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு மழைக்காகக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள் சம்சாரிகள். மேகம் தினம் விளையாட்டுக் காட்டியது. கரிசல் காய்ந்து பொசுங்கியது. இன்னைக்குப் பேய்ந்து விடும், நாளைக்குப் பேய்ந்து விடும் என்ற நப்பாசை குறைந்து

கொண்டே வந்தது. யாராவது ரெண்டு பேர் சேர்ந்து விட்டால் போதும் மழையைப் பற்றிய பேச்சுதான்" (தர்மன், சோ., 2020:155) என்று மழையின்மையால் உண்டான நிலையைப் பேசுகின்றார்.

இவ்வாறு மழையின்மையால் ஏற்படும் துயரங்களை ஏற்றுக் கொண்டு நின்றுவிடாமல், மழை பெய்ய வேண்டி வேளாண் குடியினர் சடங்குகள் நிகழ்த்துவதையும் சோ. தர்மன் பதிவு செய்துள்ளார். இவ்வகையில் மழைக்கஞ்சி எடுத்தல், கொடும்பாவி கட்டி இழுத்தல் எனும் இரு சடங்குகள் தூர்வை நாவலில் இடம் பெற்றுள்ளன.

மழைக்கஞ்சி எடுத்தல்

மழை பொய்த்துப் போகிற காலத்தில் பெண்கள் அனைவரும் ஒன்றுகூடி ஊரிலுள்ள வீடுகள் தோறும் தானியங்களைப் பெற்று அவற்றை உப்பில்லாத கஞ்சியாகக் காய்ச்சிக் குடித்துவிட்டுப் பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு பரதேசம் போவதாகக் கூறிப் புறப்படுவர். ஓரிடத்தில் அமர்ந்து மழையின்மை குறித்து ஒப்பாரி வைத்துப் பாடுவர். இதுவே மழைக்கஞ்சி எடுத்தல் சடங்காகும். இச்சடங்கு தமிழகம் முழுவதும் காணப்பெறினும் அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு சிறுசிறு மாறுபாடுகளுடன் காணப்பெறுவதையும் இங்குச் சுட்ட வேண்டும். இச்சடங்கு தூர்வை நாவலில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

"சிறுசுகள் எல்லோரும் மழக்கஞ்சி எடுத்தார்கள். இளவட்டங்களும் கொமருகளும் கிழடுகளும்கூட சேர்ந்து கொண்டார்கள்.

மழயுமில்ல தண்ணியுமில்ல
மழக்கஞ்சியோ மழக்கஞ்சி
ஆடு மாடுக்கு தண்ணியில்ல
அம்மங்கஞ்சியோ அம்மங்கட்டி

அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய வாளிகளிலும் சட்டிகளிலும் வீடுவீடாய்ப் போய் கஞ்சி வாங்கினார்கள். சோளக்கஞ்சி, வரகுச்சோறு, சாமைச்சோறு, குருதவாலிச் சோறு, அவித்த குருதவாலிச் சோறு, கம்மங்கஞ்சி, தினைக்கஞ்சி, நாத்துச்சோளச்சோறு என்று பல வகையான சோறுகள் சட்டிகளில் நிறைந்தன. சில வீடுகளில் வெங்காயமும், பச்சை மிளகாயும், துவையலும் ஊறுகாயும் கூடக் கொடுத்தார்கள். எல்லாவற்றையும் வாங்கி மொத்தம் சேர்ந்து சுமந்துகொண்டு காட்டு வழியே, ரொம்ப தூரம் நடந்தார்கள். கால்களில் கரிசல் மண்ணின் சூடு அவர்களை ஒன்றும் செய்யவில்லை. வேர்த்து விருவிருத்து ஒரு ஆவாரஞ்செடியின் முன்னால் இறக்கினர். சருவச் சட்டியில் மொத்தமாகக் கரைத்து ஏனங்களில் ஊற்றி ஊற்றிக் கொடுத்தார்கள். கஞ்சியைக் குடித்து முடித்தவுடன் பழைய பிஞ்ச செருப்புக்களாலும் பிஞ்சு சுளகாலும் அவர்களை அடித்து விரட்டினார்கள். சுடுமண்ணில் அவர்களைக்

கீழே தள்ளிப் புரட்டினார்கள். அவர்கள் கட்டாயம் அழவேண்டும். அவர்களின் கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீராவது பூமாதேவியின் மேல் விழுந்தால்தான் வர்ண பகவான் மனமிரங்குவான். அடிவாங்கிக் கொண்டு ஓடிய பெண்களை இடைவெளியில் ஒளிந்திருந்த இளவட்டங்கள் வழிமறித்து மல்லுக்கட்டி அழ வைத்தார்கள். தலையை விரித்துப் போட்டுக்கொண்டு பெண்கள் அழுதுகொண்டே ஓடினார்கள். இதில் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்தே பெண்கள் வருவதுதான். அந்த ஆவரஞ்செடியை விழுந்து கும்பிட்டுவிட்டு ஒப்பாரி வைத்து அழுதார்கள். ஆனாலும், வர்ணபகவான் மனமிரங்கவில்லை. வெய்யில் பொசுக்கியது'' (தர்மன், சோ., 2000:156, 157).

பெண்கள் ஒன்றுகூடிக் கண்ணீர் விட்டு அழுதால் வருணபகவான் கண்ணீரையொத்த மழையைப் பெய்யச் செய்வான் எனும் நம்பிக்கையை இச்சடங்கு புலப்படுத்துகின்றது. பெண்கள் கண்ணீர் சிந்துவதால் மழை பெய்யும் என்பது கண்ணீர் — மழைநீர் எனும் ஒத்திசைவை, ஒத்தது (கண்ணீர்) ஒத்ததைச் (மழைநீரை) செய்யும் எனும் மந்திர விதியைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கொடும்பாவி கட்டியிழுத்தல்

தமிழகத்தின் பிற பகுதிகளில் கொடும்பாவி கொளுத்துதல் எனும் பெயரில் நிகழ்த்தப்பெறும் சடங்கு தூர்வை நாவலில் கொடும்பாவி கட்டியிழுத்தல் எனும் பெயரிலான சடங்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

''எவனோ ஒரு கொடுமக்காரப் பாவி ஊருக்குள்ள இருக்கான், அதுதான் மழ பெய்ய மாட்டேங்கு, அந்தப் பயல ஊரவிட்டு வெரட்டிட்டா மழ பெய்யும்.''

ஊரோடு சேர்ந்து கொடும்பாவி கட்டி ஊரைச் சுத்தி இழுத்து வந்து முச்சந்தியில் வைத்துக் கொளுத்தினார்கள்...'' (தர்மன், சோ., 2020 : 157) என இச்சடங்கைச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளார் சோ. தர்மன். ''மண்ணால் ஓர் உருவம் செய்து அவ்வுருவத்தைத் தென்னை மட்டையாலான கீற்றில் வைத்து, சிறியவர்கள், பெரியவர்கள் என அனைவரும் ஒன்றுகூடித் தப்படித்துப் பாட்டுப்பாடி ஊர் முழுக்க இழுத்துச் சென்று இறுதியில் முச்சந்தியில் போட்டு செருப்பால் அடிப்பர். இவ்வுருவத்திற்குக் கொடும்பாவி என்று பெயர்...'' (சக்திவேல், பே., 2013:228) இந்தச் சடங்கையே சோ. தர்மன் மேற்குறித்தவாறு மிகச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளார். பாவம் மிகுந்தால் பாவிகள் மிகுந்தால், ஊரின் நலமும், வளமும் பாழாகும். எனவே, அந்தப் பாவத்தையும், பாவிகளையும் அழிப்பதையே குறியீட்டு நிலையில் மேற்குறித்த சடங்கு தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறு ஊரில் உள்ள பாவிகளைச் சடங்கியல் ரீதியில் அழித்தால் ஊர் தூய்மையாகி மழை பொழியும் எனும் மக்களின் நம்பிக்கையை இச்சடங்கு பதிவு செய்துள்ளது.

இச்சடங்குகளின்றி, மழை வேண்டித் தெய்வங்களை வழிபடும் சடங்கு ஒன்றையும், தூர்வை நாவல் பதிவு செய்துள்ளது. இதனை, "எந்தக் காலத்திலும் நீர் ஊற்றுப் பிடித்து பாசம் படிந்து தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும் பால்கொடி ஓடை குண்டி கழுவக்கூடத் தண்ணியில்லாம வறண்டு கிடந்தது. கண்மாயும் ஊரணியும் வறண்டு காய்ந்து கிடந்தன. ஊரு பூராவும் வரிவைத்து மழப்பேச்சியம்மனைக் கும்பிட்டார்கள்" (தர்மன், சோ., 2020:157) எனும் பகுதியால் அறியலாம்.

மனித வாழ்வில் இடம் பெறும் சடங்குகளை 1. ஆக்க நிலைச் சடங்குகள் (Positive rites) 2. எதிர்நிலைச் சடங்குகள் (Negative rites) எனப் பகுப்பர். இவற்றுள் "... ஆக்க நிலைச் சடங்குகள் என்பவை இறைவனோடு, புனிதத் தளத்தோடு (Sacred) இணைவதற்கும் தொடர்பு கொள்வதற்கும் செய்யப்படும் அனைத்து வகைச் சடங்குகளும் அடங்கும்..." (பக்தவத்சல பாரதி, 2012:298). இந்த ஆக்க நிலைச் சடங்குகளுக்குள்தான் மழைச் சடங்குகள் அடங்குகின்றன. மழையை தெய்வத்தின், இயற்கையின் அருளால் கிடைக்கும் ஒன்றாகக் கருதும் மக்கள் குறிப்பாக வேளாண் குடியினர் — உழவர்கள் அம்மழை பொய்க்கும் காலங்களில் அதை வரவழைக்கக் குறிப்பிட்ட சடங்குகளைச் செய்கின்றனர். எனவே, சடங்குகளின் வாயிலாக இயற்கையை, தெய்வங்களைத் தங்கள் இயல்பு வாழ்க்கையின் நலன் — வளம் ஆகியவற்றுக்காக வழிபடுதல், வேண்டுதல் எனும் செயற்பாடுகள் நிகழ்த்தப்படுகின்றன எனப் புரிந்து கொள்ளலாம்.

சடங்குகளும் வாழ்வியலும்

"சடங்குகள் மனித வாழ்வில் பொருள் பொதிந்தவையாக இடம் பெறுகின்றன. வாழ்வின் குறிப்பிட்ட சூழல்களில் நிகழும், குறிப்பிட்ட நிகழ்வுகளில் இடம்பெறும் சடங்குகள் அம்மக்கள் குழுவின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பழைய மரபுகள் ஆகியவற்றைக் காட்டுவதோடு அம்மக்கள் குழு இயற்கையை, உலகை எப்படி வாழ்க்கையோடு இணைத்து நோக்குகிறது என்பதையும் காட்டுகின்றன. எனவே, மனித வாழ்வில் சடங்குகளுக்கென்று குறிப்பிடத்தக்க இடம் உண்டு. இத்தகைய சடங்குகள் ஓரினத்தின் / ஒரு மக்கள் குழுவின் அடையாளங்களை வெளிப்படுத்துவனவாக, புரிந்துகொள்ள உதவுவனவாக அமைகின்றன" (சக்திவேல், பே., 2022 : 133, 134).

இந்த வகையில் பார்க்கின்றபோது, சோ. தர்மனின் தூர்வை நாவலில் இடம் பெறும் மழைச் சடங்குகள் வேளாண் குடியினரின் — உழவர்களின் உற்பத்தி வாழ்வில் மழை — மழையின்மை, அதற்காக நிகழ்த்தப்பெறும் சடங்குகள், சடங்குகளில் தொழிற்பட்டு நிற்கும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலான வாழ்வியல் கூறுகளைப் புலப்படுத்துபவையாக அமைந்துள்ளன.

முடிவுரை

நாவல் இலக்கிய வடிவம் குறிப்பிட்ட வட்டாரத்தின் வாழ்வியலை விரிவாகப் பதிவு செய்யும் வேளையில், விவரித்துச் செல்லும் நிலையில் வாழ்வின் பல்வேறு கூறுகளையும் உண்மைக்கு நெருக்கமாக நின்று வாசகர்க்குச் சித்திரித்துக் காட்டுகின்றது. இவ்வாறு சித்திரிக்கும் நிலையில் குறிப்பிட்ட வட்டாரத்தின் அச்சு அசலான வாழ்க்கையைத் தொழில்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், உணவு முறைகள், விளையாட்டுகள் முதலான பல்வேறு கூறுகளின் ஊடாகக் குறிப்பிட்ட வட்டாரத்தின் வாழ்க்கையைப் பதிவு செய்து விடுகின்றது. இவ்வகையில், தூர்வை நாவலில் பதிவு செய்யப்பெற்றுள்ள மழைச் சடங்குகள், வேளாண் தொழிலோடு சடங்குகளுக்குள்ள உறவைப் புலப்படுத்துவதோடு, மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றையும் புலப்படுத்தி நிற்கின்றன.

பயன்பட்ட நூல்கள்

1. சக்திவேல், பே., 2013, **தமிழர் தொன்மம் — அன்றும் இன்றும்,** மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்.

   Sakthivel, P., 2013, Tamilar Thonmam — Andrum Indrum, Meiyappan Pathippakam, 53, Puthutheru, Chithamparam.

2. சக்திவேல், பே., 2022, **பள்ளையம் (நாட்டுப்புறவியல் ஆய்வுகள்),** விச்சி பதிப்பகம், 255டிஏ/57ஏ, முதன்மைச் சாலை, சாமியப்பா நகர், பெரம்பலூர்.

   Sakthivel, P., 2022, Pallaiyam (Nattupuraviyal Ayvukal), Vichi Pathipakam, 255TA/57A, Muthanmai Salai, Samiyappa Nagar, Perampalur.

3. சிவசுப்பிரமணியன், ஆ., 2011, "மழையும் நாட்டார் வழக்கியலும்", **நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,** பதிப்பாசிரியர், தே. லூர்து, முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தியாகராய நகர், சென்னை.

   Sivasubramaniyam A, 2011, "Malaiyum Nattar valakkiyalum", Nattar Valakkatriyal Ayvukal, Pathippasiriyar, T. Lurthu, Mullai Nilaiyam, 9 Bharathi Nagar, First Street, Thiyakaraya Nagar, Chennai.

4. ஞானசேகரன், தே., 2000, **மந்திரம் சடங்குகள் சமயம்,** பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

Gnanasekaran, D, 2000, Manthiram Sadankukal Samayam, Parthipan Pathippakam, Thiruchirappalli.

5. *தர்மன், சோ., 2020, இரண்டாவது மீளச்சு,* ***தூர்வை,*** *வெளியீடு : அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி மாவட்டம், இந்தியா.*
Dharman So, 2020, Erandavathu Meelachu, Thoorvai, Veliyeedu: Adaiyalam, 1205/1, Karuppur Salai, Puththanatham, Trichy District, India.

6. *பக்தவத்சலபாரதி, 2012, இரண்டாம் பதிப்பு,* ***மானிடவியல் கோட்பாடுகள்,*** *வெளியீடு : அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி மாவட்டம், இந்தியா.*
Bhakthavathsalabharathi, 2012, Erandam Pathippu, Manidaviyal Kotpadukal Veliyeedu: Adaiyalam, 1205/1, Karuppur Salai, Puthanatham, Trichy District, India.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com